# THIRUMARAI AASAAN


S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 30 July 2017 Issue - 7


ஆசிரியர் உரை

# தவிர்க்கப்பட வேண்டிய மூவர்

**ஆ**திகாலந்தொட்டு அதாவது, ஏதேன் தோட்டந் தொடங்கி மனித வாழ்வு இரண்டு நிலைப்பாடுகளை உள்ளடக்கியதாகவே இருந்து வந்துள்ளது. இந்த இரண்டு நிலைப்பாடுகள் சரீர வாழ்வுக்கும் பொருந்தும், ஆவிக்குரிய வாழ்வுக்கும் பொருந்தும். தேவனாகிய கர்த்தர், ஆதாமிடம், **நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆயினும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்**(ஆதி. 2:16,17) என்று சொன்னது முதல் இந்த இரண்டு நிலைப்பாடுகள் தொடர்ந்து கொண்டே வருகிறது. ஆம், வேதாகமத்தை நாம் கவனித்து வாசிக்கும்போது, செய்யவேண்டியவைகள், செய்யக்கூடாதவைகள், கீழ்ப்படிய வேண்டியவைகள், கீழ்ப்படியக் கூடாதவைகள், ஏற்றுக்கொள்ள வேண்டியவைகள், ஏற்றுக்கொள்ளக் கூடாதவைகள் என்று பலவற்றை நாம் சொல்லிக் கொண்டே போகமுடியும். இப்பட்டியலில் தவிர்க்கப்பட வேண்டியவைகளையும்,தவிர்க்கக் கூடாதவைகளையும் மட்டுமல்லாமல், தவிர்க்க வேண்டியவர்களையும் தவிர்க்கக் கூடாதவர்களையும் கூட நாம் சேர்த்துக் கொள்ளலாம். **தவிர்த்தல்** என்ற வார்த்தைக்கான பொருள் **ஒதுங்கியிருப்பது** அல்லது **நடக்காமல் பார்த்துக்கொள்வது**.

இப்பொருளினடிப்படையில், நம்முடைய சிந்தையைச் செலுத்தும் படியான ஒரு வசனத்தை, இயேசு கிறிஸ்துவின் தாய்வழி சகோதரனாக இருந்தும் (மத் 13:55; மாற்கு 6:3) அது பற்றி வாய் திறக்காமல், இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று மட்டும் தன்னை அறிமுகம் செய்து கொள்ளும் (யூதா 1) யூதா நிருபத்தின் ஆசிரியர் நமக்கு வெளிப்படுத்திக்

கொடுத்துள்ளார். **இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோர எதிர்த்துப் பேசின பாவத்திற்குள்ளாகிக் கெட்டுப்போனார்கள்** ( யூதா 11 ) என்று இந்தத் தன்னடக்க யூதா இவர்களை அர்ச்சிக்கப் பயன்படுத்தும் வார்த்தைகளைக் கவனிக்கும்போது, இவர்கள் நம் ஆன்மீக வாழ்க்கையில் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டியவர்கள் என்பதைச் சொல்லவும் தேவையில்லை.

சரி, ஏன் இவர்களை இப்படி வசைபாடுகிறார் என்பததைத் தெரிந்து கொள்ளவும், அதிலிருந்து நமக்கான பாடங்களைக் கற்றுக்கொள்ளவும் நமது வழக்கத்தின்படியாக, இதன் பின்னணிக்குள் சென்று வருவோம். சரியா?

பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், அழைக்கப்பட்டவர்களுமாயிருந்த கிறிஸ்தவர்களுக்கு, ஆவியின் ஏவுதலினாலே ஒன்றைச் சொல்ல விரும்பி அதை வெளிப்படுத்த முற்படும்பொழுது, அதைவிட முக்கியமாக வேறொன்று இருப்பதை உணர்ந்து, ஆவியானவராலே அது குறித்து அழுத்தம் கொடுத்து எழுதியுள்ளார் (வசனம்3). ஆம், தேவனுடைய வார்த்தைகளையும் கிருபையையும் புரட்டுகிற வஞ்சனையான ஊழியக்காரர்கள் அவர்களுக்குள்ளாக எழும்பி, பக்கவழியாய் நுழைந்து தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்க ஆரம்பித்து விட்டார்கள். தேவமனிதர்கள் பொங்கி எழுவதற்கும், சீறிப்பாய்வதற்கும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் போதாதா? ஏனைய நிருபங்களின் ஆசிரியர்கள் கள்ளப்போதகங்களையும், போதகர்களையும் விமர்சித்திருந்தாலும், இதற்காக இந்த யூதாவைப் போன்று தங்களுடைய நிருபங்களின் பெரும்பகுதியை யாரும் பயன்படுத்தவில்லை. முன்னுரை (வசனம் 1,2) முடிவுரை (வசனம் 24,25) ஆகிய இந்த வசனங்களைத் தவிர மீதி எல்லா வசனங்களிலும் அந்நாட்களில் தலைதூக்கியிருந்த உபதேசப் பிரச்சனையை மையம் வைத்தே செயல்பட்டார். ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த விசுவாசத்திற்காகத் தைரியமாய் போராடுவது தான் காலத்தின் தேவை என்பதை இச்சிறிய நிருபத்தில் சுற்றிச் சுற்றி வந்து, கத்திக் கத்தி கூறுகிறார்.

தன்னுடைய இம்முயற்சியில் வெற்றி பெறுவதற்கு, கடந்த காலத்தில் என்ன நடந்ததென்பதை விளக்கி (5-7), நிகழ்காலத்தில் என்ன நடக்கிறதென்பதை எடுத்துச் சொல்லி (8-13), எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதைக் கோடிட்டுக்காட்டி (14-16) விட்டு, நீங்கள் எச்சரிப்பாயிருந்து பக்தி வாழ்வில் மின்னிட என்ன செய்ய வேண்டுமென்பதைப் படம் போட்டுக் காட்டுகிறார் (17-23). ஒரு தேவமனிதன் இதற்குமேல் ஒன்றும் செய்துவிட முடியாது என்பதற்கு இந்த யூதா மிகப்பெரிய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறான். யூதாவின் இந்நிருபத்திற்கும், பேதுரு அப்போஸ்தலனுடைய இரண்டாம் நிருபத்திற்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு என்பதை நீங்கள் ஆற அமர உட்கார்ந்து படித்தால் தெரிந்துகொள்ள முடியும்.

பேதுருவிடமிருந்து கருத்துக்களை யூதா இரவல் வாங்கினாரா அல்லது யூதாவிடமிருந்து பேதுரு கடன் வாங்கி எழுதினாரா என்பது கேள்விக்கிடமான ஒன்று. ஒருவேளை இரண்டு பேரும் ஓர் ஆதாரத்திலிருந்து பெற்றிருந்திருக்கலாமோ?

பக்திப் போராட்டத்திற்கு இப்படிப் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்ட இந்த நிருபத்தில் தான், புத்தியில்லாத மிருகங்களைப் போல் சுவாவப்படி தங்களுக்குத் தெரிந்திருக்கிறவைகளாலே தங்களைக் கெடுத்துக் கொண்டிருப்பவர்களைப்போல நீங்கள் நடவாமல் இருப்பதோடல்லாமல் ஒரு மூன்று பேருடைய வழிகளை நீங்கள் தவிர்க்க வேண்டுமென்று எச்சரிக்கிறார் (வசனம் 10,11). அந்த மூன்று பேராகிய காயீன், பிலேயாம், கோரா போன்றோரின் வழிகள் நம்முடைய பக்தி ஓட்டத்தோடு உரசியும், ஒட்டியும், இடித்தும் செல்வதால் அம்மூவரின் வழிகளை ஏன் வெட்டிவிட வேண்டுமென்பதற்கான காரணங்களை இப்பொழுது இனம்காண முயற்சிப்போம்.

## I காயீனுடைய வழியில் நடக்கக் கூடாது

தன்னடக்க யூதாவின் தவிர்க்கப்பட வேண்டிய மூவரில் முதலாவது வந்து நமது பக்தி வாழ்வில் கவனம் தேவை என்று எச்சரிக்கை மணி அடிப்பவன் வேறுயாருமல்ல நம்ம கொலைகார காயீன் தான்.

இந்தக் காயீன் முதல் முதல் இப்பூமியில் குழந்தையாகப் பிறந்தவன். நிமிடம்தோறும் உலகில் இன்றைக்குக் குழந்தைகள் பிறந்தாலும், **முதல்** என்னும் அந்தஸ்து இவனுக்கே கிடைத்தது. ஆனால், இவனை நினைக்கும்போது, இவன் சிலாக்கியத்துக்குரியவன் என்ற எண்ணம் நமக்கு வராமல், ஓர் அப்பாவியைக் கொன்ற கொலைகாரப் பாவி என்று தானே சாடச் சொல்லுகிறது. தனக்குக் கிடைத்த மேன்மையைக் தக்க வைத்துக் கொள்ளாத முதல் மூடன் இவன்.

கர்த்தர் இவனைப் பார்த்து, உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்று கேட்டதற்கு, **என் சகோதரனுக்கு நான் காவலாளியோ** (ஆதி 4:8) என்று எதிர்க்கேள்வி எழுப்பி கர்த்தருக்கே போக்குக் காட்ட முயற்சித்தான். ஆதாமும், ஏவாளும் செய்யக் கூடாததைச் செய்தபோது கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டவுடன் **பயந்து ஒளித்துக்** கொண்டார்கள் (ஆதி 3:6-10) ஆனால், இந்தக் காயீனோ **கர்த்தர் என்ற அச்சமில்லாமல்** நடந்து கொண்டான். ஆதிமுதல் பாவமும், மனிதனும் நகமும் சதையும் போன்று ஒட்டிக்கொண்டிருப்பவைதான். ஆனாலும், தேவனுக்குப் பயந்தவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டு இரக்கம் பெற்றிருக்கிறார்கள். **தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்** (நீதி 28:13) என்னும் ஞானியின் கூற்று தேர்ந்த தேவமனிதர்களுக்குத் தெரிந்திருக்கிறது. இந்தக் கொலைகார காயீனுக்கு அது புரியவில்லை. தாவீது போன்று புரிந்தவர்கள் (II சாமு 12:13) இரக்கம் பெற்று கனத்திற்குரியவர்களாக மாறியிருக்கிறார்கள் (அப்.13:22).

அது மட்டுமல்ல இன்றைக்கு கிறிஸ்தவத்தைத் தன் கோரப்பிடியில் வைத்து ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் **பொய்யான ஆராதனை** முறைமைகளுக்குத் தாயம் போட்டவனும் இவன்தான். ஆதியாகமம் நான்காம் அதிகாரத்தில் காயீன், ஆபேல் இருவரும் காணிக்கைகளைக் கொண்டு வந்தார்கள் என்றும், ஆபேலுடையது அங்கீகரிக்கப்பட்ட தென்றும் காயீனுடையது அங்கீகரிக்கப்படவில்லை என்றும் காண்கிறோம் (ஆதி. 4:3-5). ஏன் இப்படி என்பதற்கான காரணம் எபிரெயர் ஆசிரியரால் பல நூறு ஆண்டுகள் கழித்து கொடுக்கப்பட்டுள்ளது. **விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்** என்று (எபிரெயர் 11:4).

கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தியதில் காயீனுக்கு இருந்த பிரச்சனை விசுவாசம். அதாவது, கர்த்தர் இவனுக்குச் செய்யும்படியாகச் சொன்னதை இவன் ஏற்று கர்த்தர் சொன்ன வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவில்லை. கர்த்தரின் காரியங்களைத் தன் விருப்பம்போல் நடத்தலாம் என்ற கேடான சிந்தை இவனுக்குள்ளாக ஆழமாக இருந்துள்ளது. தப்பு, தப்பு, தப்பு. இன்னும் பல குணக்கேடுகளும் இவனிடம் இருந்துள்ளதென்பதை யோவான் அப்போஸ்தலன் வார்த்தைகளிலிருந்து நாம் காணமுடியும். **பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோரனைக் கொலைசெய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலை செய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்த னிமித்தந்தானே** (1 யோவான் 3:12). இவன் எப்படிப்பட்டவன் என்பதற்கு இது போதாதா? ஆகவேதான், யூதா ஆசிரியர் **காயீன் வழி** வேண்டவே வேண்டாம் என்று எச்சரிக்கிறார்.

அன்பானவர்களே! பக்தி வாழ்வில் நம் ஒவ்வொருவரின் வழியும் எப்படிப்பட்ட வழியாக உள்ளது? சிந்தித்துப் பார்ப்போம். சகோதர சிநேகத்திலே நாம் எப்படிப்பட்டவர்களாயுள்ளோம்? **தன் சகோதரனைப் பகைக்கிறவனை மனுஷ கொலைபாதகன்** என்று வேதம் கூறுகிறது மறந்துவிட வேண்டாம் ( 1 யோவான் 3:15). அடுத்து, நாம் செய்யும் தவறுகளை, குற்றங்களை, பாவங்களை ஒப்புக்கொள்ளுகிறவர்களாக உள்ளோமா? அல்லது மறைக்கிறவர்களாக உள்ளோமா? இன்னும், தேவனை ஆராதிப்பதில் நம்முடைய செயல்பாடு எப்படிப்பட்டதாயிருக்கிறது? கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசச் சட்டங்களுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து யோவான் 4:24 ல் உள்ளபடி, ஆவியோடும், உண்மையோடும் தொழுபவர்களாக உள்ளோமா? சொல்லுங்கள். காயீன் வழியில் நடப்பதின் மூலம் **ஐயோவை** வலியச் சென்று அழைக்க வேண்டாம். ஆபேல் போல் விசுவாசித்து நம் பக்தி வாழ்வை நடத்துவோம்.

## II பிலேயாமின் வழியில் ஓடக் கூடாது

தன்னடக்க யூதாவின் தவிர்க்கப்பட வேண்டிய மூவரில், இரண்டாவதாக இடம் பிடித்து நமது பக்தி வாழ்வில் கவனம் தேவை என்று எச்சரிக்கை மணி அடிப்பவன் வேறு யாருமல்ல பேயோரின் குமாரனாகிய பொருளாசைப் பித்தன் பிலேயாம்தான்.

இங்கே யூதா ஆசிரியரால் கண்டிக்கப்படுகிறவர்கள் காயீனுடைய வழியில் நடக்கிறவர்களென்றும் பிலேயாமின் வழியில் ஓடுகிறவர்களென்றும் கூறுகிறார். அதாவது, காயீனுடைய வழியைக் காட்டிலும், பிலேயாமின் வழி மிகவும் பிடித்தமானதாக இருக்கிறதென்று சொல்லாமல் சொல்லுகிறார். அப்படியென்ன அவன் வழி நல்ல வழியா? இல்லவே இல்லை. கூலிக்காக மாரடித்த வழி, பேராசை வழி. பேதுரு அப்போஸ்தலன் இவன் வழியைக் குறித்துக் கூறும்போது, **செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள். அவன் அநீதத்தின் கூலியை விரும்பி தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான். பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது** என்று (II பேதுரு 2:15,16).

கர்த்தரின் தீர்க்கதரிசி என்னும் கிடைத்தற்கரிய சிறப்பைப் பெற்றவன் நடந்து கொண்ட விதத்தைப் பார்க்கும் போது நம்ப முடியவில்லை. ஆயினும், வேதம் சொல்லும்போது அதை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. எகிப்திலிருந்து விடுதலை பெற்ற இஸ்ரவேல் மக்கள் யோர்தானைக் கடந்து கானானுக்குள் காலடி எடுத்து வைக்கும் முன் மோவாபின் சமவெளிகளில் பரவிக்கிடந்தார்கள். இவர்களின் எண்ணிக்கை எதிரிகளைக் கலங்க வைத்தது (எண். 22: 1-3). மோவாபின் ராஜாவாகிய பாலாக் தந்திரம் பண்ணி தீர்க்கனாகிய பிலேயாமைத் தன்பக்கமாகத் திருப்பிவிட்டால், இஸ்ரவேலை எளிதில் வீழ்த்திவிடலாம் என்று மனப்பால் குடித்து, தன் ஆட்களை அனுப்பி **அவர்கள் என்னிலும் பலவான்கள் ஆகிலும், நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசிர்வதிக்கப்பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று அறிவேன் ; ஆதலால், நீர் வந்து, எனக்காக அந்த ஜனங்களைச் சபிக்க வேண்டும். அப்பொழுது ஒருவேளை நான் அவர்களை முறியடித்து அவர்களை இத்தேசத்திலிருந்து துரத்திவிடலாம் என்று சொல்லச் சொன்னான்** ( எண். 22:6 ). அப்படியே மூப்பரும், மீதியானியரின் மூப்பரும் **குறிசொல்லுகிறதற்குரிய கூலியைத்** தங்கள் கையில் எடுத்துக்கொண்டு, புறப்பட்டு பிலேயாமிடத்தில் போய், பாலாகின் வார்த்தைகளை அவனுக்குச் சொன்னார்கள் ( 2.7 ). இதைக் கேட்டவுடன் முடியவே முடியாது என்று அவர்களை ஓட ஓட விரட்ட வேண்டிய இடத்தில் இருந்தவன், **கர்த்தர் எனக்குச் சொல்லுகிறபடி உங்களுக்கு உத்தரவு அருளுவேன்** என்று சொல்லி இராத்தங்க அனுமதித்தான்.

பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் (2:5) என்ற தேவ வார்த்தையின் உட்பொருள் தீர்க்கதரிசியாகிய இவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஒருவேளை, இவ்வார்த்தை பின்னாளில் வெளிப்பட்டதாக இருந்தாலும், தேவனுக்கு எதுபிடிக்கும், எது பிடிக்காது என்ற அறிவுமா தீர்க்கதரிசியாக இருந்த இவனுக்கு இல்லாமல் போய்விட்டது. சரி, தேவனிடம் கேட்டான், தேவன், **நீ அவர்களோடே போக வேண்டாம்** என்று சொல்லிவிட்டார். ஏற்றுக்கொண்டு இவன் போகாமல், கர்த்தரின் உத்தரவு இல்லை என்று பிரபுக்களை திருப்பி அனுப்பிவிட்டான். இதுவரை சரி. ஆனால், கையாலாகாத பாலாக் மறுபடியும் முயற்சிக்கிறான் வஞ்சக

வார்த்தைகளோடு ( 22:17 ). மனதளவில் பிலேயாம் மயங்கிவிட்டான். ஆயினும், ஒப்புக்கு, **என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை மீறக்கூடாது** என்று கூறி இராத்தங்க மறுபடியும் அனுமதித்தான். இருதயத்தின் நினைவுகளைச் சோதிக்கிற தேவன், **நீ எழுந்து அவர்களோடே கூடப் போ; ஆனாலும், நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படி மாத்திரம் நீ செய்ய வேண்டும் என்றார்** (22:20). ஆனாலும், **அவன் போகிறதினாலே தேவனுக்குக் கோபம் மூண்டது** (22:22).

நல்லவேளை கழுதை வாயைத்திறந்து பேசி இவன் மதிகேட்டைத் தடுத்தது. அங்கே, **நான் பாவஞ்செய்தேன்** என்றும் ஒத்துக்கொண்டான் (22: 23) ஆனால், மீண்டும் இருமுறை **கனம் கிடைக்கும்** என்ற சூழ்ச்சி வார்த்தைக்களில் வீழ்ந்து கர்த்தரின் நாமத்தை உதட்டளவில் உச்சரித்து, பொருளாசையில் அமிழ்ந்து போனான். கர்த்தரின் நாமத்தை வெறுமனே உச்சரிப்பவர்களுக்கு ஒருபோதும் அங்கீகாரம் இல்லை. இயேசு ஆண்டவர், **இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது** என்று கூறியுள்ளார் ( மத் 15. 9 ). பொருளாசையில் மயங்கி மூன்று முறை முயற்சித்தும் பிலேயாம் நினைத்தது நடக்கவில்லை. மாறாக, என்ன கிடைத்தது தெரியுமா? நீங்காத அவப்பெயர் மற்றும் கொடுமையான மரணம் (எண். 31:8). தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தவனுக்கு இது தேவையா?

அருமையானவர்களே! நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? உலகமும், கிறிஸ்தவமும் பிலேயாமின் வழியில் தான் முண்டியடித்து ஓடிக்கொண்டிருக்கிறது. பொருளாசை எல்லோர் மனதிலும் கோலோச்சிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையில் முன்னேறத் துடிப்பது தவறல்ல. ஆனால், எப்பாடுபட்டாவது பணக்காரனாகி விட வேண்டுமென்பது பாவமாகும். இப்படிப்பட்ட பாவம் விக்கிரகாரதனையாகும் (கொலோ 3:5). அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு இதுபற்றி எழுதுவதைக் கவனியுங்கள். **ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும் மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவிதமான இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்"** (I தீமோ 6:9 - 10). பிலேயாமின் **அநீதத்தின் கூலி** வழி சரீரப்பிரகாரமான கொடூர மரணத்தைத் தந்தது. அப்படிப் போலவே கிறிஸ்துவின் உபதேசத்தில் நடக்க வேண்டிய நாம் பிலேயாமின் வழியில் நடந்தால் சரீர வேதனைகளோடு ஆவிக்குரிய மரணமும் நித்திய ஆக்கினையும் வந்து சேரும். ஆகவே, எச்சரிக்கையாயிருந்து காரியங்களை நடத்துவோம்.

## III கோராவின் பாவத்திற்குள்ளாகக் கூடாது

தன்னடக்க யூதாவின் தவிர்க்கப்பட வேண்டிய மூவரில், மூன்றாவதாகத் தலையைத் தூக்கி, நமது பக்தி வாழ்வில் கவனம் தேவை என்று எச்சரிக்கை மணி அடிப்பவன் வேறு யாருமல்ல எதிர்த்துப் பேசின கோராதான்.

யாக்கோபுக்குப் பிறந்த 12 பேரில், தேவன் தனக்காகத் தெரிந்து கொண்ட கோத்திரம் லேவி கோத்திரம். லேவியின் குடும்பத்தாரில், தேவனுடைய பெட்டியைச் சுமக்கும்படியாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கோகாத்தின் புத்திரர். அந்த வம்சத்தில் வந்தவன்தான் கோராகு. அதாவது, கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட கோத்திரத்தையும், குடும்பத்தையும் சேர்ந்தவன். இது ஒரு பாக்கியமான நிலை. லூக்கா நற்செய்தியாளர் **எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ, அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்** (லூக் - 12 : 45 ) என்று கூறுகிறார். ஒருவகையில் இவர் தேவனால் அதிகம் எதிர்பார்க்கப்படும் நிலையில் இருந்தவன். ஆனால், அந்த எதிர்பார்ப்பைப் பொய்யாக்கினான்.

எப்படியெனில், தன்னோடு தாத்தான், அபிராம், ஓன் என்பவர்களையும், அவர்களோடு, இஸ்ரவேலரில் சபைத் தலைவர்களாகவும், பிரபலமானவர்களாகவும் இருந்த 250 பேரைச் சேர்த்துக் கொண்டு, **மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி நீங்கள் மிஞ்சிப் போகிறீர்கள்; சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படியிருக்க, கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்றார்கள்** (எண். 16 : 3). நாம் வாழும் நாட்களில் சபையிலும், சமுதாயத்திலும் கலக மனப்பான்மையுள்ளவர்கள் எப்படிச் செயல்படுகிறார்களோ அதே மனப்பான்மை தான் இந்தக் கோராவுக்கு இருந்துள்ளது. தேவனுக்கும், தேவனுடைய சபைக்கும், தேவமனிதர்களுக்கும் எதிராகக் கலகம் செய்கிற ஒவ்வொருவரும் கோராகின் வழித்தோன்றல்களே. தங்களுடைய முகத்திரை கிழிந்து போகக்கூடாது என்பதற்காக ஆட்களை துணைக்குச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள்.

சரி, இப்படித்தான் கூட்டங்கூடி என்ன செய்தார்கள்? என்னதான் பேசினார்கள்? இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனாலே, திரளான மக்களைக் கானானுக்கு வழிநடத்தும் உன்னதமான பணியைச் செய்யும்படி அழைக்கப்பட்ட **மோசேயும், ஆரோனும் பாவிகளாம், சபையார் எல்லாரும் பரிசுத்தர்களாம்.** இந்தக் கலகக் கூட்டத்தாரின் நடுவில் கர்த்தர் இருக்கிறாராம் (எண். 16 : 3). இது எப்படி? நன்றாகத்தான் இருக்கிறது என்கிறீர்களா ? இதுவும் சரிதான். மோசே அங்கே முகம் குப்புற விழுந்து, பின்பு எழுந்து, **கர்த்தர் யாரிடத்தில் இருக்கிறார், கர்த்தர் சமூகத்தில் யார் பரிசுத்தவான்** என்று நாளைக்குத் தெரியும் என்று சொன்னதோடு (எண். 16 : 5). நீங்கள் எனக்கும், ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடவில்லை, மாறாக, **கர்த்தருக்கு விரோதமாகக் கூட்டங் கூடினீர்கள்** என்று தெளிவுபடுத்தினான் (16:11).

பிறகு அங்கு ஒரு சோதனை நடத்தப்பட்டது. மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக கோராகு சபையாரையெல்லாம் தன்னிடமாகச் சேர்த்துக் கொண்டான் (16 : 18, 19). இஸ்ரவேல் மக்கள் ஏன் இப்படி நடந்து கொண்டார்கள் என்று புரியவில்லை. சிலரின் சுய நலத்திற்காக ஒட்டுமொத்த சபையாரும் துணை போயிருந்திருக்கிறார்களே. ஆச்சரியமாக உள்ளது. திரளான பேர்கள் செய்கிறார்கள் என்பதற்காக ஒன்று நியாயமாகி விடுவதில்லை. சபையாரெல்லாரையும் அழிக்கத் தேவன் சித்தங் கொண்டபோது, வழக்கம் போல மோசே மன்றாடிக் காப்பாற்றினான் (16 : 22). பிறகு ஒரு கட்டத்தில், **பூமி தன் வாயைத் திறந்து அவர்களையும், கலகக்காரர்களின் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது** (22 : 32). நூதனமான முறையில் இவர்களுக்கு மரணம் நேரிட்டது.

அருமையானவர்களே, யூதா ஆசிரியரால், கோராகு கடுமையாகக் கடிந்து கொள்ளப்பட்டதற்கான காரணம் புரிகிறதா? **அதிகாரத்தை எதிர்த்தல்.** தேவன், தன்னுடைய அதிகாரமும், தன்னால் நியமிக்கப்படுகிறவர்களுக்குக் கொடுக்கப்படும் அதிகாரமும், அவமாக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிப்பதில்லை. அவருடைய அதிகாரம் எதிர்க்கப்படுவதைக் கடுமையாகப் பார்க்கிறார். இப்படிப்பட்டவர்களைக் கடுமையாக நடத்துகிறார். ஆகவே, நாம் அதிகாரத்திற்கு அடங்கி நடக்க வேண்டியது அவசியம். பவுலடியார் ரோமாபுரியாருக்கு இதுபற்றி இவ்விதம் எழுதியுள்ளார். **எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்தை எதிர்த்து நிற்கிறான். அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள்** (ரோமர். 13 : 1, 2).

பரலோகத்தின் தேவனால், இயேசு கிறிஸ்துவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத். 28 : 18). அந்த இயேசு ஆண்டவரால் தான் புதிய ஏற்பாடு அவருடைய தாசர்களைக்கொண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 1 : 16; II கொரி 4:4). புதிய ஏற்பாட்டு உபதேசக் கோட்பாடுகள் அனைத்திற்கும் நாம் நம்மைக் கீழ்ப்படுத்த வேண்டும். அப்படி கீழ்ப்படுத்தாவிட்டால் கிறிஸ்துவையும், அவருடைய அதிகாரத்தையும் கோராகுபோல் நாமும் எதிர்க்கிறவர்களாகவே இருப்போம். இக்கேடான நிலை நமக்கு ஒருபோதும் வேண்டாம்.

மாறாக, கிறிஸ்துவுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் நம்மை ஒப்புக்கொடுத்து, நம்முடைய பக்தி வாழ்வை பக்குவமாய் நடத்துவோமாக! ஆமென்! ●

## அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்

Bro. J.C. சோட்

பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் திருமுழுக்குக் கொடுக்கும் அதிகாரத்தை கிறிஸ்து பெற்றிருந்தார் என்பது பற்றி நாம் இங்கு கவனிப்போம்.

கர்த்தருக்கு வழியைச் செவ்வைபண்ண யோவான் ஸ்நானகன் வந்தான் என வேதவசனம் நமக்குக் கூறுகிறது. வேறுவிதமாகக் கூறின், அவன் பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்பும்படி போதித்து, தண்ணீரில் திருமுழுக்குக் கொடுத்து வந்தான். தேவனுக்கு முன்பாக கிறிஸ்து முற்றிலும் பரிசுத்தமானவராக இருந்தபோதிலும், எல்லா நீதியையும் நிறைவேற்ற ஏதுவாக அவரும் திருமுழுக்குப் பெற யோவானிடத்தில் வந்தார். அதன் பின்னர், ஒருவன் இரட்சிக்கப்பட விசுவாசித்து திருமுழுக்குப் பெற வேண்டுமென்று போதிக்கும்படியாய் அவருடைய அப்போஸ்தலர்களை அனுப்பவிருந்தார்.

கிறிஸ்துவுக்கும் தனக்கும் உள்ள வேறுபாட்டைப் பற்றி யோவான் கூறுகையில், **மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார்; அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றார்** (மத் 3:11-12) இப்போது, யோவான் இங்கு என்ன சொல்லிக் கொண்டிருக்கிறான்? நாம் உன்னிப்பாக இதை கவனித்து, இக்காரியங்களை நம்மால் புரிந்து கொள்ள வேண்டுமென அவர் விரும்பினார்; ஆகவே, நாமும் நிச்சயமாக இதைப் புரிந்துகொள்ள முடியும்.

முதலாவதாக, கிறிஸ்து தன்னைவிட மிகவும் வல்லமைமிக்கவராக இருப்பார் என யோவான் காட்டுகிறான். மனந்திரும்புதலுக்கென்று தான் தண்ணீரில் திருமுழுக்குக் கொடுக்கும் போது, கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்குக் கொடுப்பார் என யோவான் கூறினான்.

பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்குப் பெறுவது பற்றி நிறைய பேசப்படுகிறது. இரண்டுமே இன்று பெற்றுக் கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது. விசுவாசிகள் இன்று பரிசுத்த

ஆவியின் திருமுழுக்கைப் பெறுகின்றனர் என போதிக்கப்படுகிறது. இத்தகைய திருமுழுக்கைப் பெற்றுக் கொள்வோர், அற்புதங்களைச் செய்யும் வல்லமையைப் பெறுகின்றனர் என்றும் கூறப்படுகிறது. அக்கினியால் பெறும் திருமுழுக்கு நம்மைப் பரிசுத்தமாக்கும் ஒரு முறை அல்லது நம்மை சோதிக்கும் ஓர் அனுபவம் என்றும், நம் வாழ்வின் ஏதாவது ஒரு கட்டத்தில் இது நடக்கிறது என்றும் போதிக்கப்படுகிறது. கர்த்தருக்கு முழுவதுமாக ஊழியஞ்செய்ய ஒரு மனிதனை இது தயார்ப்படுத்துகிறது என்றும் கூட சொல்லப்படுகிறது. வேதாகமம் இவ்வாறு போதிக்கிறதா அல்லது வேறு விதமாக போதிக்கிறதா என்பதே இப்போது கேள்வி.

பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் பெறப்படும் திருமுழுக்கைப் புரிந்துகொள்ள, இதுபற்றிக் குறிப்பிட்டுள்ள வசனப் பகுதியை நாம் பார்ப்போம். கோதுமையை சேகரிக்கும் ஒரு விவசாயியை யோவான் படம் பிடித்துக் காட்டும் போது, கோதுமையை களஞ்சியத்தில் சேர்த்து, அதிலிருந்து பிரித்தெடுத்த பதரை அக்கினியிலே சுட்டெரிக்கிறான் என்கிறார். இப்போது, கிறிஸ்துவும் மக்களை இவ்வழியிலேயே நியாயந்தீர்ப்பார் எனக் கூறுகிறார். நல்லவர்களை பரிசுத்த ஆவியால் திருமுழுக்குச் செய்யும் வல்லமையுடன் அவர் இருப்பார் அல்லது பரிசுத்த ஆவியின் திருமுழுக்கால் ஆசீர்வதிப்பார். ஆனால், பதரையோ, அல்லது கெட்டுப்போனவர்களையோ பிரித்தெடுத்து அக்கினியில் போடுவார். வேறுவிதமாகச் சொன்னால், அவர்கள் அக்கினியில் முழுக்குப் பெறுவர். யோவான் கூறும் இரண்டு திருமுழுக்குகள் இவைகளே, ஒன்று நல்லவர்களுக்கும் மற்றது கெட்டவர்களுக்கும்.

வசனங்களை நாம் தொடர்ந்து படிக்கையில், இயேசு, அவர் புறப்படுமுன்னர், தேற்றவாளனை அல்லது பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர்களுக்கு அனுப்பும்படி வாக்களிப்பதைப் பார்க்கிறோம் (யோவான் 14 : 26).

இந்த திருமுழுக்கைக் கொடுக்கும் வல்லமையை கிறிஸ்து மட்டுமே பெற்றிருந்தார். அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு வாக்களிக்கப்பட்டிருந்தது. பரிசுத்த ஆவியின் திருமுழுக்கால், இயேசு அவர்களுக்குப் போதித்தவைகள் அனைத்தையும் நினைவுபடுத்தும் வல்லமை பெறவும், வரப்போகிற காரியங்களைப் பற்றி சத்தியத்தை உபதேசிக்கவும், அந்நிய மொழிகளில் பேசவும், அற்புதங்களைச் செய்யவும், அவர்களுக்கு முடிந்தது. தமது பிரதிநிதிகளாக தேவன் அவர்களை அனுப்பினார் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளவும்,அவர்களுக்கு தேவனுடைய கற்பனைகளை அறிவிக்கவும், இந்த வல்லமையை அவர்களுக்கு கொடுக்க வேண்டியதாயிருந்தது. இந்த

வல்லமையை அவர்கள் பெற்ற பின்னர், **அவர்கள் புறப்பட்டுபோய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக்கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்** (மாற்கு 16:20). என நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், எவ்வளவு காலம் இது தொடர்ந்து நடைபெற்றது? அப்போஸ்தலர்கள் அனைவரும் உயிரோடு இருக்கும் வரையில் இவ்வாறு நடந்தது. ஏனென்றால், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு வாக்குத்தத்தம் அவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தது. புதிய ஏற்பாடு எழுதிக் கொடுக்கப்பட்ட பிறகு தேவனுடைய வார்த்தைகளை உறுதிப்படுத்த அற்புதங்களும், அடையாளங்களும் தேவை இல்லாமற் போயிற்று. ஏனெனில், வசனம் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. இன்று, பலமக்கள் தாங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருப்பதாகக் கூறிக் கொள்ளுகின்றனர். ஆனால், அவர்கள் ஒருவருக்கொருவர் முரண்பாடான கருத்துக்களைப் பேசுகின்றனர்: வசனத்தில் காணப்படாத சபைகளில் அவர்கள் அங்கத்திதினர்களாக இருக்கின்றனர்; இப்படியிருக்கையில், தாங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருப்பதாக அவர்கள் எவ்வாறு கூறமுடியும்? உண்மை என்னவென்றால், அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். வஞ்சிக்கப்பட்ட அவர்கள் இப்பொழுது மற்றவர்களின் இருதயங்களை வஞ்சித்துக் கொண்டுள்ளார்கள்.

தேவன் பாரபட்சமற்றவர் என்பதை நிரூபிக்க, பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அப்போஸ்தலர்களுக்கும், மனம் மாறிய புறவினத்தானான கொர்நேலியு மற்றும் அவன் வீட்டாருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டிருந்தாலும், ( அப். 10, 11 அதி ) பிற எல்லா மக்களுமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு வழியாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள்; எப்படியெனில், சத்தியத்தைப் போதிக்கவும் எழுதப்பட்ட வசனத்தைக் கொடுக்கவும் அப்போஸ்தலர்களை வழி நடத்தினவர் பரிசுத்த ஆவியானவர்தான்.

ஆனால், மற்றொரு திருமுழுக்கைப் பற்றி, அதாவது அக்கினி முழுக்கு பற்றி என்ன கூறுகிறீர்கள்! இதையும் நடத்த கிறிஸ்து வல்லமை உடையவராகவே இருக்கிறார். ஆனால், இது நல்லவர்களுக்கு அல்ல, கெட்டுப்போனவர்களுக்கு மட்டுமே. கடைசிநாளில், கெட்டவர்கள் அனைவரையும் அக்கினிக் கடலிலே கிறிஸ்து தள்ளிப்போடுவார் என வேதாகமம் கூறுகிறது (வெளி 19:20, 20:10). பின்னர், நாம் படிக்கிறோம்,

**பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும் விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்** ( வெளி 21:8 ). அதுவே தான், இயேசு அளிக்கப்போகும் அக்கினி திருமுழுக்கு என யோவான் கூறினார். அப்படியானால், அக்கினி முழுக்கு நமக்கு ஒருபோதும் வேண்டாம் என ஜெபிப்போம்.

திருமுழுக்கு என்பது ஓர் அடக்கம், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கில் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர் மேல் ஊற்றப்பட்டார் அல்லது அவர்கள் பரிசுத்த ஆவியில் முழுகினார்கள் (அப். 2:1-4) . கடைசி நாளிலே, கெட்டவர்கள் அக்கினி முழுக்கைப் பெறும் போது, அக்கினிக் கடலிலே அவர்கள் முழுக்கப்படுவர் அல்லது அடக்கம் செய்யப்படுவர். நாம், பரிசுத்த ஆவியின் திருமுழுக்குக் காலத்தை மிகவும் கடந்து வந்துவிட்டோம்; அக்கினி முழுக்குக்கு மிகவும் முந்திவிட்டோம் என யாரோ கூறினார்கள். ஆனால், நமது பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டி, தண்ணீர் திருமுழுக்குப் பெற நாம் சரியான காலத்தில் வாழ்கிறோம் (அப். 2 : 38).

வேதவசனங்களின்படி, நீங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருக்கவில்லை என்பதை நான் அறிவேன். அக்கினி முழுக்கை நீங்கள் பெறவில்லை என்பதையும் நான் அறிவேன். ஏனெனில், அது கெட்டவர்களுக்குக் கடைசி நாளில் நடத்தப்படும் முழுக்கு ஆகும். ஆனால், கேள்வி என்னவென்றால், நீங்கள் வசனத்தின்படி தண்ணீர் திருமுழுக்குப் பெற்றிருக்கிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் தேவனை விசுவாசிக்கவும், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும், கிறிஸ்துவை தேவனின் குமாரன் என அறிக்கை செய்யவும், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட, தண்ணீரில் திருமுழுக்குப் பெற வேண்டும் என்றும் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இவ்வாறு செய்தால், கர்த்தர் உங்களை இரட்சித்து, தமது சபையில் உங்களை சேர்த்துக் கொள்ளுவார் (அப். 2 : 38, 47). இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் (அப். 22:16) .

●

பெண்கள் பகுதி

# நல்ல பங்கை தெரிந்தெடுப்பது

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்தக் கட்டுரையின் வாயிலாக நாம் சந்திக்க இரக்கம் காட்டின தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

நம்மை விட்டெடுபடாத நல்ல பங்கு என்ன, அதை எவ்வாறு தெரிந்தெடுப்பது என்று வேதத்தின் துணை கொண்டு பார்க்க உள்ளோம். உலகப் பொருளும், ஆவிக்குரிய காரியங்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து காணப்பட்டாலும், அவ்வப்போது இரண்டையும் வேறுபடுத்திப் பார்த்து ஆவிக்குரிய காரியங்கள் முதல் இடத்தை வகிக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து போதித்திருக்கிறார். லூக். 10:38-42 வசனப்பகுதிகளில் மார்த்தாள், மரியாள் சம்பவம் இடம் பெற்றுள்ளது. மார்த்தாள் பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் சிரத்தை காட்டினாள். மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்கின மார்த்தாளிடம், **தேவையானது ஒன்றே, மரியாள் தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்** என்று இயேசு சொன்னார்.

எதற்காக இயேசு மார்த்தாளைக் கடிந்து கொண்டார்? அவள் வசனத்துக்கு முக்கியத்துவம் தராமல் சமைத்துக் கொண்டிருந்தாளே, அதற்காகத்தான். அன்றாட வீட்டு வேலைகளைப் போட்டுப் பெரிது பண்ணி, அலட்டிக் கொண்டு ஆவிக்குரிய காரியங்களைத் தன் மனதுக்குள்ளே கொண்டு செல்ல அவள் அனுமதிக்கவில்லை. உணவு தயாரிப்பதென்பது தீமையல்ல, நல்லது தான். இயேசு கிறிஸ்து, பவுல் போன்றவர் தங்களுக்குச் சமைத்துப் போடவும், துணிகள் துவைத்து, தேய்த்து என்று சரீர தேவைகளை பூர்த்தி செய்ய பெண்களைச் சேர்த்திருக்கலாம். மார்த்தாக்கள் தேவையென்பது இயேசுவுக்கும் தெரியும். ஆனால், இந்த நன்மையான, தேவையான வேலைகள் எல்லாம் ஆவிக்குரிய பொறுப்புகளுக்கு அடுத்தது தான் என்பதை நாம் கற்றுக் கொள்ள

இந்த மாதிரி மார்த்தாக்களும் தேவைப்படுகிறார்கள். சரீரத் தேவைகளை விட ஒரு சிறந்த காரியத்துக்கு வழிநடத்தும்படியாக மார்த்தாக்களின் செயல்பாடு இருக்க வேண்டும்.

### இயேசு கிறிஸ்து தேவையானது ஒன்றே என்றார்

நாம் வாழும் வாழ்க்கைக்கு ஒரே ஒரு நோக்கம் இருக்கிறது என்று பொதுவாக எல்லோருமே அறிவோம். ஆனால், அந்த ஒன்று எது என்பதை அறிந்து கொள்ள அநேகர் இந்த உலகத்தையே சுற்றி குழம்பிப்போய் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு சிலர், அந்த ஒன்று, உலகப் பொருள்களை வெற்றிகரமாக சம்பாதிப்பதிலும், சமுதாய அந்தஸ்திலும், கலை அறிவியலிலும் இருப்பதாக எண்ணித் தேடி ஏமாற்றமும் அடைகிறார்கள். நம்முடைய இரட்சகர் அந்த ஒரே நோக்கம் என்ன என்பதை விவரிக்கும் போது **நம்மை விட்டு எடுபடாத** ஒன்றை தெரிந்தெடுக்க வேண்டும் என்று கூறுகிறார். உலகத்திலே **நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம்** (1தீமோ. 6:7).

நாம் மரிக்கும்போது நாம் எல்லாஉலகசம்பத்துக்களிலிருந்தும் பிரிக்கப்படுகிறோம். அப்போது, **எது நம்மை விட்டு எடுபடாதது?** ஆத்துமா மட்டுமே. ஆகையால், என்றும் அழியாத ஆத்துமாவை நித்தியத்திற்கு ஆயத்தப்படுத்துதலே வாழ்க்கையின் நல்ல பங்கு - அதாவது, ஆராதனை, ஜெபம், தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பது, அதை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பது, ஆவியின் கனிகளைப்பெற்றுக்கொள்வதற்காகப் பிரயாசப்படுவது, ஆவிக்குரிய வளர்ச்சியை மேம்படுவதற்காக எல்லா கற்பனைகளையும் கைக்கொள்வது போன்றவையாகும். இந்தக் காரியங்கள் தான் உன்னத நோக்கத்தை அடைய உதவுபவைகள்.

### ஆவிக்குரிய காரியங்களின் மேன்மை

**ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல** (லூக். 12 : 15) என்று இயேசு சொன்னார். பொருள் என்பதே தவறு அல்ல. பொருளை வைத்திருப்பது அவசியம் என்றாலும் தன்னை

விட்டெடுபடாத நல்ல பங்கை மையமாக வைத்து வாழும் ஒரு நபர் பொருளை ஈட்டலாம், தனக்கென்று ஒரு வீட்டை வைத்திருக்கலாம், ஓய்வு எடுக்கலாம், மற்றவர்களோடு சந்தோஷமாக நேரத்தைச் செலவிடலாம். ஏனென்றால், இவைகளெல்லாம் வாழ்க்கையின் ஒரு ஓரம் போன்றது என்பதை புரிந்து வைத்திருப்பார். இவையெல்லாம் மேடையிலே வந்து போகக்கூடிய திரைச்சீலை போன்றது தான். இவைகளை மட்டுமே மையமாக வைத்து விட்டு வாழும் ஒருவன், பிரம்மாண்டமான மேடை ஒன்றை அமைத்து மிகச் சிறந்த கட்சி அமைப்புகளை அமைத்து ஒரு போதும் அரங்கேறாத நாடகத்துக்காக காத்திருப்பவனைப் போல்தான் இருப்பான்.

**மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?** (மாற். 8 : 36). இதைத்தான் லூக்கா 12 : 19 – 21 வசனங்களில் பணக்கார மதிகேடனின் வாழ்க்கையில் பார்க்கிறோம். தனக்காக செல்வங்களைத் தேடிக் கொண்டு தேவனுக்காக ஐசுவரியத்தை தேடாததினால் அவன் மதிகேடன்

**அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்** என்று யோவான் 6 : 27 – ல் இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். உணவுக்காக வேலை செய்யக்கூடாது என்பது இதன் பொருளா? கண்டிப்பாக இல்லை. ஆவிக்குரிய போஜனத்தோடு சரீர போஜனத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அது ஒரு பொருட்டே அல்ல என்பது தான் இதன் பொருள்.

அன்பான சகோதரிகளே, உலகம், தேவன், உலக உடைமைகள், ஆத்துமா இவைகள் பற்றி பார்த்தோம். உலகக் காரியங்கள் அழிந்து போகக் கூடியவைகள். ஆத்துமா அழியாதது. நம்மை விட்டுப் பிரிக்க முடியாதது ஆன்மா ஒன்று மட்டுமே என்பதை நாம் என்றும் மறந்து விடக்கூடாது. ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவது விலையுயர்ந்த ஆபரணங்களைக் காட்டிலும் மதிப்புடையது. **முத்துக்களைப் பார்க்கிலும் அது விலையேறப் பெற்றது. நீ இச்சிக்கத்தக்க தொன்றும் அதற்கு நிகரல்ல** (நீதி. 3 : 15). அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்ற விசுவாசம் சோதிக்கப்பட்டு என்று 1 பேதுரு 1 : 7 ல் வாசிக்கிறோம். சோதிக்கப்படும்

விசுவாசம் எப்படி பொன்னைக் காட்டிலும் விலையேறப் பெற்றது? இந்த விசுவாசம் ஆவியில் ஒருவர் வளர்வதற்கு உதவும் பொக்கிஷமாக இருக்கிறது. எனவே, இது அழிந்து போகிற பொன்னைக் காட்டிலும் அதிக மதிப்புடையது, விலையேறப்பெற்றது.

தேவன் நிர்ணயித்திருக்கிற அந்த அளவின்படி வாழும் ஒரு பெண் குணசாலியான பெண்ணாகத் திகழ முடியும். முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்த விலையை அவள் பெறுகிறாள் (நீதி. 31:10).

மரியாள் தேவையானது ஒன்று, அது தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கு, அந்த நல்ல பங்கு தன்னை விட்டு எடுபடாத ஆத்துமாவுக்கடுத்த காரியங்களில் நேரத்தைக் கழிப்பதென்பதை அறிந்திருந்தபடியால் இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருப்பதைத் தெரிந்தெடுத்தாள். இயேசுவும் அதை அங்கீகரித்தார். நாமும் கூட ஆத்துமா சம்பந்தப்பட்ட காரியங்களைத் தெரிந்தெடுத்து, அழியாத நித்தியத்தைச் சுதந்தரிக்க இயேசு சொல்லிச் சென்ற காரியங்களைச் செய்வோமாக! ஆமென்!

## கிறிஸ்தவனுக்கான தேவ அன்பின் இனிய வார்த்தைகள்

நீ என் நாமம் தரிக்கப்பட்டவன்

நான் உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்

நான் உன்னைத் தப்புவிப்பேன்

நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்

நான் உன்னை மீட்டுக்கொண்டே

நீ என்னுடையவன்

வாலிபர் பகுதி

# இருதயத்தை வெறுமையாக்காதே

சகோ. பென்னி மார்ட்டீன்

**பி**ரியமான வாலிப உள்ளங்களுக்கு ஆண்டவாராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் மீண்டுமாக இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நம் சரீரத்திலுள்ள இருதயம் தேவனுடைய அருமையான சிருஷ்டிப்பாகும். அது தேவனுடைய கிரியையை வெளிப்படுத்துகிறது. ஆகையால் தான் சங்கீதகக்காரானாகிய தாவீது **நான் பிமிக்கதக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டமையால் உம்மைத்துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்** என்று சொன்னார் (சங்கீதம் 139:14). மனிதனுடைய மார்பின் இடதுபக்கத்திலிருக்கும் இருதயம் தசையாலானது, அது நம்முடைய முழு உடலுக்கும் இரத்தத்தை அனுப்பிக்கொடுக்கிறது. இந்த இருதயம் நிமிடத்திற்கு சராசரியாக 72 முறைகள் துடிக்கிறது. இவ்விதமாக ஒரு வருடத்தில் சராசரியாக 37 மில்லியன் முறைகள் துடிக்கிறது. இருதயம் துடிப்பதை நிறுத்திக்கொண்டால் நம் வாழ்வு முடிந்துவிடும். இருந்தபோதிலும் இருதயம் மற்ற உறுப்புகளைப் பார்த்து பொறாமைப்படாமல் தன் வேலையை ஓய்வின்றி செய்து வருகிறது. வேதாகமத்தில் நாம் பார்க்கும்போது **எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் கேடுள்ளதுமாயிருக்கிறது அதை அறியத்தக்கவன் யார்?** என்று நாம் பார்க்கிறோம். மேலும் இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் என்று மலைப்பிரசங்கத்தில் நாம் வாசிக்கிறோம். இங்கே இயேசு கிறிஸ்து நம் உடல் உறுப்பாகிய இருதயத்தைப் பற்றி பேசவில்லை மாறாக நம் எண்ணங்களின் இருக்கையாகிய கண்களால் பார்க்க முடியாத மனதைப் பற்றித்தான் பேசுகிறார். இன்றைய நாட்களில் பெரும்பாலான வலிபர்கள் தங்கள் இதயத்தை உலகப்பிரகாரமான காரியங்களில் தொலைத்துவிட்டு அலைந்து கொண்டிருக்கிறார்கள். சரி, இப்போது இருதயத்தை நிறுத்து அறிகிற தேவன் நம் இருதயத்தை எப்படி வைத்துக்கொள்ள வேண்டுமென்று விருப்புகிறார் என்பதை வேதவசனங்களின் வெளிச்சத்தில் நாம் காண்போம்.

## நம் இருதயத்தை வெறுமையாக வைக்கக்கூடாது.

பிரியமான வாலிபர்களே, இருதயம் வீடுபோன்ற ஓர் அமைப்பாகத்தான் இருக்கிறது. இந்த வீடாகிய இருதயத்தில் பொல்லாத சிந்தனைகளும் கொலைபாதங்களும் விபச்சாரங்களும் வேசித்தனங்களும் களவுகளும் பொய்ச்சாட்சிகளும் தூஷணங்களும் குடிகொண்டிருக்கின்றன (மத்தேயு 15:19). அதே நேரத்தில் நல்ல காரியங்களும் இந்த இருதயத்திலிருந்துதான் ஊற்றெடுத்து வருகிறது (மத்தேயு 12:35). நாம் கிறிஸ்துவினிடத்தில் வரும்போது நம்முடைய இருதயமெனும் வீடு சுத்தப்படுத்தபடுகிறது (அப்போஸ்தலர் 15:9). அதன் பிறகு நம்முடைய இருதயங்களை நாம் காலியாக வைத்திருக்கக்கூடாது. அப்படி காலியாக வைத்திருந்தால் இவ்வுலகத்தின் அசுத்தமான காரியங்கள் நம் இருதயத்தை ஆக்கிரமித்து நம்மை அலைக்கழித்துவிடும். இன்றைய நாட்களில் பல வாலிபர்களிடத்தில் தேவனுடைய வார்த்தைகளை எடுத்துரைத்து அவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தும் போது அவர்களுடைய இருதயங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்பட்டு தூய்மையான நிலையில் இருக்கிறது. ஆனால் அதற்கு பிறகு அவர்கள் தங்கள் இருதயங்களை அவிக்குரிய காரியங்களால் நிரப்பாமல் காலியாக தங்கள் இருதயங்களை வைத்துக்கொள்வதால் பொல்லாங்கன் அவர்களை பறித்துக்கொண்டுபோய் விடுகிறான். அப்படி பிசாசு பல யுவான்களின் இருதயத்தைப் பதம்பார்த்துவிட்டான். பிரியமானவர்களே ! நம் இருதயங்களை வெறுமனே வைக்காமல் இருக்க வேண்டுமென்றால் ஆவிக்குரிய காரியங்களால் நம் இருதயங்களை நிரப்ப வேண்டும். நிரப்பி அவைகளையே சிந்தித்துக்கொண்டிருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் (பிலிப்பியர் 4:8) ல் கடைசியாக சகோதரரே உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ அவைகளை சிந்தித்துக்கொண்டிருங்கள் என்று சொன்னார்.

நம் இருதயத்தை ஆவிக்குரிய காரியங்களினால் நிரப்பாவிட்டால் என்ன நடக்கும்? நாம் ஏற்கனவே பார்த்ததுபோல நம் இருதயம் வீடுபோன்ற ஓர் அமைப்பாயிருக்கிறது. இதில் நாம் பல காரியங்களை குடியிக்கச் செய்ய முடியும். நம் இருதயம் எதையும் ஏற்றுக்கொள்ளும் திறன் பெற்றிருக்கிறது. உதாரணமாக இன்று உலகில் அறிவியலின் அளவற்ற வளர்ச்சியினால் கொஞ்சங்கூட தகவல்களுக்கு பஞ்சமே இல்லை.

தடுக்கிவிழுந்தால் தகவல்கள் என்கிற ஒரு நிலைதான் காணப்படுகிறது. இவ்வுலகத்தின் காரியங்களால் நாம் நிரப்பட்டால் உலகத்தின் போக்கிற்கேற்ப நாம் அடித்துச்செல்லப்படுவோம். நாம் இவ்வுலகத்தில்தான் வாழ வேண்டுமென்று தேவன் குடியிருப்பின் எல்லைகளைக் குறித்திருக்கிறார். (அப்போஸ்தலர் 17:26). அப்படி நாம் இப்பூமியில் வாழும்போது சில தகவல்களை தெரிந்துகொள்வதில் தவறு ஏதுமில்லை. ஆனால், நாம் தகவல் களஞ்சியமாக இருக்க வேண்டுமென்று தேவனால் எதிர்பார்க்கப்படுவதில்லை. எனவே தான், நாம் ஆவிக்குரிய காரியங்களைக் கொண்டு நம் இருதயத்தை நிரப்பவேண்டும். அப்படி செய்யாவிட்டால் காலப்போக்கில் நம் இருதயம் கடினமாகிவிடும். முன்பு சுவிசேஷத்தால் நம் இருதயங்கள் தொடப்பட்டு நாம் கிறிஸ்துவுக்குள் வந்தோம். ஆனால் தேவனக்கடுத்த காரியங்களால் நம் இருதயத்தை நிரப்பிவிட்டால் நம் இருதயம் கடினமாகி உணர்வில்லாமல் போய்விடும் (மத்தேயு13:15). அப்போது மனந்திரும்புதற்கேதுவாய் நாம் புதுப்பிக்கப்படுவது கூடாத காரியமாகிவிடுகிறது (எபிரெயர் 6:4-6). அப்போது நம் முன்னிலைமையிலும் பின்னிலைமை கேடுள்ளதாகிவிடும்.

எனவே பிரியமான வாலிபர்களே! நம் இருதயத்தை காத்துக்கொள்ள வேண்டுமென்றால் தேவனுக்கு முதலிடம் கொடுத்து அவர் நம் இருதயத்தை ஆழ நாம் அனுமதிக்க வேண்டும். நம் இருதயத்திற்குள் எது போகவேண்டுமென்று நாம் தீர்மானித்து அவைகளை நாம் உள்ளே அனுமதிக்கவேண்டும். கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரனமாக வாசமாயிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும் (கொ 3:16). நாம் தொலைக்காட்சியில் பார்க்கின்ற காரியங்களைக்குறித்தும், வாசிக்கும் புத்தகங்களைக்குறித்தும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வேதாகமத்தை அதிகமாக தியானித்து ஆவிக்குரிய புத்தங்களை அதிகமாக வாசித்து காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். நம் இருதயத்தை உலகத்தால் கறைபடியாத படி பார்த்துக் கொள்ள வேண்டும் . தேவன் நம் இருதயத்தை காத்துக் கொள்ள அவரிடம் மன்றாட வேண்டும் . இந்த காரியங்களை எல்லாம் நாம் தொடந்து செய்துவந்தால் நம் இருதயம் வெறுமையாக இருக்காது. மாறாக தேவனுக்கடுத்த காரியங்களால் நிறைந்திருக்கும். அப்படி நிறைந்திருக்க தேவன் தாமே உதவி செய்வாராக! ஆமென்.

●

சிறுவர் பகுதி

# விசுவாசித்து ஆசீர்வதிக்கப்படுங்கள்

Bro. ஏபில் நாயகம்

**எ**னக்குப் பிரியமான சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் இன்பராம் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் சுகமாக இருக்கிறீர்கள் என விசுவாசிக்கிறேன். நானும் நலமாக இருக்கிறேன். குழந்தைகளே! இந்த சிறுவர் பகுதியின் மூலம் நீங்கள் கற்றுக் கொண்டிருக்கும் பாடங்கள் உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கிறதா? நிச்சயம் இருக்கும் என நம்புகிறேன். இந்த சிறு வயதிலிருந்து தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாக வாழ்வது உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும். சரி இந்த மாதத்திற்கான பாடம் என்னவென்று பார்க்கலாமா? தொடர்ந்து படியுங்கள்.

பிள்ளைகளே! இச்சிறு வயதில் உங்களுக்கு தேவன் மீது விசுவாசம் அதிகம் இருக்கவேண்டும். **விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாக இருப்பது கூடாது காரியம்** என்று எபிரெயர் 11:6 ல் வேதம் நமக்கு சொல்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியர் 4:13 ல் **என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு** என்று சொல்லுகிறதை வாசிக்க முடியும்.

சரி, எதற்காக விசுவாசிக்க வேண்டும்? எதை விசுவாசிக்க வேண்டும்? எவ்வளவு விசுவாசிக்க வேண்டும் என்று பல கேள்விகள் உங்களுக்கு வரும். அப்படித்தானே? சொல்கிறேன், தொடர்ந்து படியுங்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மத் 19:26 ல் தேவனாலே எல்லாம் கூடும் என்று சொல்லுகிறார். கர்த்தருடைய தூதன் இயேசுவின் தாயாகிய மரியாளிடம் லூக் 1:37 ல் தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று சொன்னார். பழைய ஏற்பாட்டில் ஏரேமியா தீர்க்கதரிசி எரேமியா 32:17 ல் உம்மால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை என்று சொல்லுகிறார். ஆக பிள்ளைகளே, தேவன்

ஒருவர் இருக்கிறார் என்று விசுவாசிப்பதோடு விட்டுவிடாமல், தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்றும், எதையும் செய்ய வல்லமையுள்ளவர் என்றும் நீங்கள் விசுவாசிக்க வேண்டும். நல்ல கல்வி, அறிவு, ஒழுக்கம், நல்ல நண்பர்கள், நல்ல தாலந்துகள் இப்படி நீங்கள் விரும்பும் ஒவ்வொன்றையும் தேவன் உங்களுக்குக் கொடுக்க வல்லவராகவே இருக்கிறார்.

பிள்ளைகளே, விசுவாசம் என்பது சந்தேகமில்லாததாக இருக்க வேண்டும். கடுகு விதை அளவு விசுவாசம் இருந்தாலும், சந்தேகமில்லாத விசுவாசமாக இருக்கவேண்டும். அந்த விசுவாசம் தான் மலைகளை பெயர்க்கும் விசுவாசம். உங்கள் விசுவாசத்தோடு தேவனாலே இது செய்ய முடியுமா என்ற கேள்வியும், சந்தேகமும் இருக்குமானால், அந்த விசுவாசம் மலையைப் போல் பெரிய விசுவாசமாக இருந்தாலும், கடுகின் விதையளவு கூட அதினால் பிரயோஜனமில்லை.

எனவே, தேவன் மேல் உள்ள உங்கள் விசுவாசத்தை இன்னும் பெலப்படுத்துங்கள். தேவன் உங்களை நிச்சயமாய் ஆசீர்வதிப்பார். ●

## நாளும் நடப்பும்

- ஜெருசலேம் புனிதத் தலத்தில் தொழுகைக்கு அனுமதி
  – இஸ்ரேல் அரசு .
- வங்கிகளில் ஆதார் மையங்கள் தொடங்கத்திட்டம்
  தலைமைச் செயல் அதிகாரி.
- வேலைவாய்ப்பு அலுவலகத்தில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சலுகை
  – அமைச்சர்
- சூரிய மின்சக்தியுடன் கூடிய ரயில் தில்லியில் அறிமுகம்
  – ரயில்வேதுறை
- முகநூல் பயன்பாட்டாளர்கள்
  – உலக அளவில் இந்தியா முதலிடம் .
- தமிழகத்தின் சில மாநிலங்களில் டெங்கு காய்ச்சல் பரவி வருகிறது.

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழுமுகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை ஆகஸ்ட் மாத இதழில்)**

1. மோசே தங்ளோடுகூட எகிப்திலிருந்து எடுத்துக்கொண்டு போனது என்ன?
2. மோசே ஆரேன் பார்வோனோடே பேசும்போது அவர்கள் வயது என்ன?
3. எத்தனை வருஷம் இஸ்ரவேல் புத்திரர் மன்னாவைப் புசித்தார்கள்?
4. மோசேக்கு எத்தனை குமாரர்? அவர்களின் பெயர் குறிப்பிடுக?
5. யாத்திரகாமத்தில் கர்த்தர் என்ற பதம் எத்தனை முறை உள்ளது?
6. மோசேயின் கைகளைத் தாங்கிப்பிடித்த இருவர் யார்?
7. கொத்தமல்லி அளவும் வெண்மை நிறமாகவும் இருந்தது என்ன?
8. தண்ணீர் கசப்பாயிருப்பது எங்கே?
9. ஏலீமில் இருப்பது என்ன?
10. யாரை தேவன் தண்டியாமல் விடார்?

(யாத்திராகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்)

## ஜீன் மாத வினாக்களுக்கான விடைகள்

1. 40அதிகாரங்கள், 1213 வசனங்கள்
2. யேகோவா (6:3)
3. மோசே, ஆரோனின் பெற்றோர் (6:20)
4. நான் விருத்த சேதனமில்லாத உதடுகளுள்ளவன் (6:12,30)
5. மனமடிவினாலும் கொடுமையான வேலையினாலும் (6:9)
6. பத்து, மூன்று
7. தேவனுடைய விரல் (8:19)
8. கல்மழை
9. என் முகத்தைக் காணும்நாளில் சாவாய் (10:28)
10. அணியணியாய் (10:51)

## சரியான பதில் எழுதியவர்கள்

சாலோமோன்தனம் - காங்கயம்

சாமுவேல் மோகன்தாஸ் - சென்னை

ஜெமீலா செல்லையா - நெல்லை

உதயகுமார் வைலட் - சென்னை

ஜெயமணி ஜெயபாண்டியன் - ஈரோடு

ஜெ. ஜான்சி - ஆனைமலை

புஷ்பம் முத்துமாணிக்கம் - ஈரோடு

இந்திரா ஜெபகனி - நாசரேத்

ரம்யா - காடையாம்பட்டி

பாக்கியம் சம்பூரணம் - ஈரோடு

நிறைமதி ராஜன் - சென்னை

ஜெயதாய் - நாசரேத்

அருள்ராஜ் - சென்னை

ஜெயராஜ் (Rtd.Tr) - பொள்ளாச்சி

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** அப்போஸ்தலனாகிய பவுல் I கொரி 1 : 17-ல் ஞானஸ்நானங் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார் என்று சொல்லுகிறபடியால் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்று சிலர் வாதிடுகின்றனர்.ஆகவே இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமா? அவசியமில்லையா?

**பதில் :** இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் மிகமிக அவசியம் என்று வேதாகமம் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. அப்போஸ்தலனாகிய பவுல் இங்கே எந்தச் சுழ்நிலையில் இதைச் சொன்னார் என்று பார்க்கும் போது கொரிந்து சபையிலே விசுவாசிகளுக்குள்ளாக பிரிவினை எண்ணம் மேலோங்கி இருந்தது. ஆகவே தான் சபை விசுவாசிகள் நான் பவுலைச் சேர்ந்தவன், நான் கேபாவைச் சேர்ந்தவன், நான் அப்போல்லோவைச் சேர்ந்தவன் என்று சொல்லிக்கொண்டிருந்தபடியானாலே சபைக்குள்ளாக பிரிவினை வந்தது ( I கொரி 1:11,12 ). இப்பிரிவினைப் பிரச்சனைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் தீர்வை ஏற்படுத்த முயற்சித்தார். அதினிமித்தம் கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என்று பவுல் அவர்களிடத்தில் கேட்டார். கொரிந்துபட்டணத்து சபையில் பிரிவினைக்குக் காரணம் மனமாற்றமடைந்தவர்கள் தங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தவர்கள் மீது கொண்டிருந்த அதீதப் பற்றுதான். ஆகையால் தான் பவுல் என் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு நான் கிறிஸ்புவிக்கும் காயுவுக்குமேயன்றி உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார் என்று கூறுகிறார் (13-16).

இப்படிக் கூறுவதால், அப்பேஸ்தலனாகிய பவுல் ஞானஸ்நானத்தின் முக்கியதுவத்தை ஒருபோதும் குறைத்து மதிப்பிடவில்லை. ஏனென்றால், அவர் ஞானஸ்நானமே தேவையில்லை என்று அவர் கூறவில்லை. மாறாக அதுமாத்திரமே எனக்கு அருளப்படவில்லை, அந்த வேலையை மற்றவர்கள் செய்யட்டும் என்று குறிப்பிடுகிறார். கொரிந்து பட்டணத்தார் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 18:8). இங்கே பவுலும் தனது கைகளாலே சில கொரிந்தியர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

அவரால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் கிறிஸ்பு, காயு மற்றும் ஸ்தேவனுடைய வீட்டார். இவர்கள்  தவிர அங்கே அவர் வேறுயாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. ஆனால் அவருடைய சுவிசேஷ பிரசங்கத்தைக் கேட்டு மனமாற்றமடைந்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று வேதம் சான்றளிக்கிறது. சுவிசேஷம் பிரங்கிக்கப்பட்டபோது ஞானஸ்நானமும் போதிக்கப்பட்டது. பிரசங்கத்தின் நோக்கம்  ஞானஸ்நானம் பற்றி போதிப்பது தான் (மாற்கு 16:16இமத் 28:28-20). இப்போதனையை ஒருவர் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெறும்பொழுது அவர் கிறிஸ்துவைத் தரித்துகொள்கிறார் என்று கல 3:27 ல் பவுல் குறிப்பிடுவதின் மூலம் அவர் ஞானஸ்நானம் தான் ஒருவருக்கு இரட்சிப்பை கொடுக்க முடியும் என்பதை வலியுறுத்திகிறார். ஆகவே, பவுல் சுவிசேஷம் பிரசிங்கிக்கவே விரும்புகிறேன், அதைக் கேட்டு ஞானஸ்நானம் பெற விரும்புகிறவர்களுக்கு நானல்ல என்னோடிருப்பவர்களே கொடுக்கட்டும் என்பதை வலியிறுத்தவே இவ்விதம் அவர் தனது நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.


**Rare Opportunity - Dont Miss**
**Master Degree in Bible**

Duration : 6 Weeks in a year

Teachers : From Abroad - USA



Medium : English

Degree : By Accredited University in USA

Fees : Free

Qualification : Must have a basic degree in Bible

Age : Between 25 -50

**Contact : 99655 - 30385 , 98427 - 30382**

# எதற்கு தேவன் உங்களை அழைத்தார்?

Bro. பாண்டியன்

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். நாம் அறிந்தபடி எக்லீசியா என்ற கிரேக்க வார்த்தை தமிழில் **சபை** என்றும் அதற்கு **அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்** என்றும் அர்த்தம் ஆகிறது. சரி, யாரால் எதற்கு அழைக்கப்பட்டோம், என்ற கேள்விக்கு புதிய ஏற்பாடு 1கொரி1:9ல் தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் என்று காண்கின்றோம். ஆக, உங்களை அழைத்தவர் தேவன் என்றும் அழைக்கப்படக் காரணம் அவருடைய குமாரனுடன் ஐக்கியமாயிருக்க என்றும் தெளிவாகப் புரிகிறது. பொதுவாக நம் தேவன் மனிதர்களுடன் உறவாடவே விரும்புகிறார். ஆதி மனுஷனாகிய ஆதாமுடன் மாலை குளிர்ச்சியான வேளையில் உலாவுகிற தேவனாக அறியப்படுகிறார். பின்பு, ஏனோக்கு தேவனுடன் சஞ்சரித்தான் என்றும் அதைத் தொடர்ந்து நோவா அவர்களும் சஞ்சரித்தார் என்றும் பார்க்கிறோம் (ஆதி 6:9) . அதைத்தொடர்ந்து, ஆபிரகாமை தன்னுடன் உறவாட அழைத்த தேவன் அவன் பிள்ளை ஈசாக்கு மற்றும் பேரப்பிள்ளை யாக்கோபு வரை நான் உன்னோடிருக்கிறேன் என்று தைரியப்படுத்தினார். ஆதி 28:15. இதையெல்லாம் நாம் ஆராய்ந்து பார்க்கும்போது நம் அன்பின் தகப்பனாகிய தேவன் - மனுஷர்களோடு எப்போதும் தொடர்பில் இருக்க விரும்புவது தெளிவாகத் தெரிகிறதல்லவா? அதைப்பற்றி

ஏன் தேவன் மனிதனோடே தொடர்பில் இருக்க விரும்புகிறார்? ஏனெனில் மனிதன் அவர் சாயலாக உருவாக்கப்பட்டவன். எப்படி மனுஷர் மத்தியில் நட்பு என்ற உறவு மதிப்புமிக்கதாக இருக்கிறதோ அதே போல் தான் தேவனும் மனிதனை தன்னோடே ஐக்கியமாக இருக்க அழைக்கிறார். பரலோகத்தின் தேவன் இந்த பூமியில் தன்னால் உருவாக்கப்பட்ட மனிதனோடே உறவாட விரும்புவது எவ்வளவு பெரிய சிலாக்கியம் என்று சிந்தித்துப்பாருங்கள். மோசே ஓரேப் மலை மீது தேவனோடே பேசப் போனபோது அவன் ஒருவனைத் தவிர மற்ற யாருக்கும் அனுமதியில்லை; அதே போல் கூடாரத்தில் பிரவேசித்து கிருபாசனத்தின் முன்பாகவும் மோசே தேவனுடன் பேச அனுமதிக்கப்பட்டான் (யாத் 25:21,22). தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த மோசேயை பேர்சொல்லி அழைத்தார் (யாத். 33:17) .

அதே போல் இஸ்ரவேல் ஜனங்களைப் பற்றி ஏசாயா புத்தகத்தின் 43ம் அதிகாரம் முதல் வசனத்திலேயே உன்னை பேர் சொல்லி அழைத்தேன் என்கிறார். ஜனங்கள் தேவனை மறந்து அவரைக் கோபமூட்டியபோதும் தேவன் அவர்களை வெறுத்து ஒதுக்காமல் மறுபடியும் மறுபடியமாக தன் அன்பை அந்த ஜனங்கள் உணர வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார். வானதிவானங்களும் கொள்ளாத மகிமையுள்ள தேவன் நம்மோட உறவாடவிரும்புவது ஒரு தகப்பன் தன் பிள்ளைகளிடம் காண்பிக்கும் அன்பைவிட எவ்வளவு பெரிதாயிருக்கிறது என்று பாருங்கள்.

எனக்கன்பானவர்களே! உங்களையும் என்னையும் கூட தேவன்பேர் சொல்லி அழைத்திருக்கிறார் என்று அறியுங்கள். நம் தாயின் வயிற்றில் உருவாகுமுன்னே நம்மை முன் குறித்த தேவன் அவர். அது மாத்திரமல்ல உலக தோற்றத்திற்கு முன்னமே நம்மைக் கிறிஸ்துவுக்குள் அவருடைய பிள்ளைகளாகும் படி தெரிந்து கொண்டார் என்று எபேசியர் முதலாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். எனவே, இப்போது சபையில் இருக்கும் நாம் எல்லோரும் தேவனுடைய அழைப்பால் வந்திருக்கிறோம். தேவன் நம்மைத் தெரிந்து கொண்டது ஏன்? என்று கேட்போமானால் அவருடைய குமாரன் இயேசுகிறிஸ்துவைப்போல் நாம் இருப்பதற்கும் தேவனுக்கு முன்பு பரிசுத்தமாயிருப்பதற்காகவும் நம்மை தம் மகிமைக்கு புகழ்ச்சியாக தெரிந்து கொண்டுள்ளார் என்று காண்கிறோம். நீங்கள் இந்த சமுதாயத்தில் ஒரு சாதாரணமானவர்களாய் இருக்கலாம். ஆனால் நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டவர்கள் என்று பெருமைப்படுங்கள்.

நாம் தேவனால் அழைக்கப்பட முக்கிய காரணம் நம் தலைப்பு வசனத்தில் கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருக்க என்று பார்த்தோம்! அதன் அர்த்தம் அவர் எப்படி தன் வாழ்வில் தேவசித்தத்தை நிறைவேற்றினாரோ அதே வண்ணமாய் நாமும் தேவசித்தத்தை நிறைவேற்றுவது ஆகும். உதாரணமாக அவர் இவ்வுலகில் வந்தபோது சொந்த ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை! அது போல் நீங்கள் சபை அங்கத்தினராய் இருப்பது ஒருவேளை உங்கள் உறவினர்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால், நாம் தேவனுக்கு முன்னுரிமை தந்த கிறிஸ்துவை போல் வாழக் கடமைப்பட்டுள்ளோம். சமாரியா ஸ்திரீயிடம் பேசும்போது ஆண்டவர் பசிவேளையில் இருந்தார். சீஷர்கள் உணவளிக்க முன்வந்த போது என் பிதாவின் சித்தம் செய்வதே எனக்கு ஆகாரமாயிருக்கிறது என்றார். எனவே நாமும் நம்முடைய மாம்ச உணர்வுகளைப் பெரிதுபடுத்தாமல் அடக்கி சகோதர ஐக்கியத்திற்கும் கூடுதலுக்கும் முக்கியத்துவம் தருவதே தேவ சித்தமாயிருக்கிறது. நம்முடைய சபை கூடுதலுக்கும் ஆண்டவர் சொன்ன தாலந்து உவமைக்கும் சம்பந்தம் உண்டு.

மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் என்று இயேசு சொல்லும் போது அங்கே மூன்று பேரிடம் தாலந்துகளைக் கொடுத்ததைக்குறித்து உவமையாகக் கூறினார். ஐந்து தாலந்தை வாங்கினவன் பத்தாக்கினான். இரண்டை வாங்கினவன் நான்காக்கினான். ஒரு தாலந்தை வாங்கியவன் புதைத்து வைத்தான். ஆகவே, நாமும் சபை காரியங்களில் புதைக்கும் செயலை செய்வோமானால் அவரோடு கூட ஐக்கியமாயிருப்பது எப்படி? நாம் நேரப்படி சபை கூடி, சபை நடவடிக்கைகளில் உதவிசெய்யும் போது தேவ ஆசீர் நமக்கு உண்டாகும். இல்லையெனில் நமது இரட்சிப்பின் உரிமைகள் பறிக்கப்பட்டு அழுகையும் பற்கடிப்புமான இடத்திற்குப்போக நேரிடும். சபையில் வெறுமனே தலையைக்காண்பித்து திரும்பாமல் ஆரம்ப ஜெபத்திற்கு முன்பாக கூடி வர வேண்டும் என்ற வாஞ்சை இருக்க வேண்டும். பாடல்கள் பாடும்போது அர்த்தங்களை உள்வாங்கி உணர்வோடு பாட முயற்சிக்க வேண்டும். இதையே பவுல் நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன், நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன் கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன் என்கிறார். சபையில் தேவ செய்தியளிக்கும் போது வசனங்கள் நம் இருதயத்தோடே பேசுவதை உணர வேண்டும். கவனங்களை சிதறவிடவோ, குட்டித்தூக்கம் போடவோ கூடாது. அதையே ஆண்டவர் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்று எச்சரிக்கின்றார். வாரத்தின் முதல் நாள் செய்தி அன்று மட்டுமல்ல அந்த வார முழுமைக்குமான ஆலோசனையாக எடுத்து அனுதினமும் நடக்கையில் பின்பற்ற வேண்டும். இதற்காகத்தான் பவுல், கிறிஸ்துவோடே ஐக்கியமாயிருக்க தேவன் உங்களை அழைத்திருக்கிறார் என்கிறார்.

எபேசியர் நான்காம் அதிகாரம் முதற்பகுதியில் பவுல் எச்சரித்து எழுதுகிறதாவது நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து தாழ்மை பொறுமை சாந்தம் போன்ற குணம் உடையவர்களாய் அன்பில் பிறரை தாங்கி சமாதானமாயிருக்க ஜாக்கிரதையாய் இருங்கள் என்கிறார். நாம் ஒவ்வோரு வாரமும் மேற்கண்ட கிறிஸ்துவின் குணாதிசயங்களை நடைமுறைப்படுத்துகிறோமா? என்று நம்மை நாமே பரிசோதனை செய்வதே கர்த்தருடைய பந்தியின்

சாராம்சமாகும். அப்படியெல்லாம் ஒருவராலும் நடக்க முடியாது என்று மேற்போக்காக சிலர் சொல்வதுண்டு. அது மாம்சசிந்தையின்படி பேசுவதாகும். மேற்படி குணாதிசயங்களில் நாம் நடக்க நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது (எபே 4:7) என்று பவுல் குறிப்பிட்டுக் காண்பிக்கிறார்.

கிறிஸ்துவோடே ஐக்கியமாயிருக்க தேவன் நம்மை அழைத்திருக்கிறார் என்று சொன்ன பவுல் அப்போஸ்தலன் பிலி2:1-5ல் குறிப்பிடும்போது அந்த ஐக்கியம் இருக்குமானால் நீங்கள் ஒருமனமுள்ளவர்களாய் ஒற்றுமையாய் நடக்கவும் வாக்குவாதம் பெருமை இவைகளைத் கவிர்த்து மற்றவரே நம்மை விட மேன்மையானவர் என்ற எண்ணத்தை வளர்த்துக்கொள்ளவும் வேண்டும். சுயநலத்தைத் தவிர்த்து பிறருடைய தேவைகளையும் சிந்திப்பதே கிறிஸ்துவுடன் நாம் ஐக்கியமாயிருப்பதற்கு அடையாளமாகும். ஆகவே நாம் தேவனால் அழைக்கப்பட்டுள்ளோம் அவர் சித்தப்படி செய்வோமானால் சங்கீதக்காரன் சொன்னது போல, **இதோ சகோதரர் ஒருமித்து வாசம் செய்வது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது** என்று நாமும் சொல்வோம் (சங். 133:1). தேவக்கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென். ●

## பரிசேயரின் ஏழு பிரிவுகள்

1. சீகேம் பரிசேயர்
2. இடறி விழுகின்ற பரிசேயர்
3. விசாரப்படுகிற பரிசேயர்
4. கவசம் அணிகின்ற பரிசேயர்
5. இரத்தம் சிந்துகிற பரிசேயர்
6. பயப்படுகிற பரிசேயர்
7. அன்பு கூறுகின்ற பரிசேயர்

# நம் ராஜா வருகிறார்

Bro. Charles E.Cobb

இயேசு கிறிஸ்து கிறிஸ்தவனின் ராஜாவாக இருக்கிறார். அவர் ராஜாதி ராஜாவாக கர்த்தாதி கர்த்தாவாக வாழ்கிறார், ஆளுகிறார் (வெளி.17:14;19:16). சபையில் அவர் எல்லாவற்றுக்கும் தலையாயிருக்கிறார், அவரே சரீரத்திற்கு இரட்சகராயிருக்கிறார். இன்று அவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து தம்முடைய இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களை சொந்தமாக்கிக் கொள்வதற்கு தம்முடைய வருகைக்கான நேரத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறார்.

கெம்பீரமான இயேசு தம்முடைய மகிமைப் பொருந்தினவராய் சகல பரிசுத்த தேவதூதர்களுடன் வருவார். அது எவ்வளவு வல்லமையான, ஒளி மயமான காட்சியாக இருக்கும். தேசங்களிலுள்ள மனிதர்கள் அவருடைய மகிமையைக் காண்பார்கள். அது ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது **கண்கள் யாவும் அவரைக் கானும் அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்** (வெளி. 1:7).

இயேசு கிறிஸ்து திரும்ப வந்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபித்து எருசலேமிலிருந்து ஆயிரம் வருடங்கள் அரசாட்சி செய்வார் என்பது ஒரு பிரபலமான கோட்பாடு. ஆனால், சோககரமாக அதற்கு வேதாகம அடிப்படையிலான உண்மையான ஆதாரங்கள் இல்லை. ராஜ்யம் இயேசுவின் சமகாலத்தவர்களில் சிலர் உயிரோடிருந்த போதே ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது (மாற்கு 9:1). கொலோ செயருக்கு எழுதப்பட்ட நிரூபத்தில் ராஜ்யம் ஏற்கனவே இருந்ததையும் மக்கள் அந்த ராஜ்யத்தில் உட்படுத்தப்பட்டதையும் நாம் கற்றுக்கொள்கிறோம் (கொலோ. 1:13,14). ஆகவே, ராஜ்யம் ஏற்கனவே இருந்து வருகிறது, இயேசு அதன் ராஜாவாக இருந்து அதை ஆண்டு கொண்டிருக்கிறார்.

கிறிஸ்துவின் வருகைபற்றி தேதி குறிப்பது காலகாலமாக பிரபலமான ஒரு யூகமாக இருந்து வருகிறது. வேத வாக்கியங்களின் வெளிப்படையான போதனை இயேசு எப்போது வருவார் என்பது யாருக்கும் தெரியாது என்பது தான். **கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்...** ( II பேதுரு 3:10 ). **கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்** (I தெச. 4:16).

**ஆனால் அந்த நாளும், நாழிகையும் நமக்குத் தெரியாது (மாற்கு 13:32,33)**

நம் கர்த்தர் ஜீவிக்கிறது எவ்வளவு நிச்சயமோ அதேப் போல நிச்சயமாக அவர் திரும்பி வருவார். **நான் மறுபடியும் வருவேன்** என்பது தான் குமாரனுடைய உண்மையான வாக்குதத்தமாயிருக்கிறது (யோ. 14:3).

நம் ராஜா வரும்போது மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் கூப்பிடுவார் (வெளி 20:12). கனம், மேன்மை, வல்லமை பொருந்திய மனிதர்கள் கர்த்தருக்கு முன்பாக நிற்கும்படி அழைக்கப்படுவார்கள். வீணான வாழ்கையை வாழ்ந்தவர்களும் கர்த்தருக்கு முன்பாக நிற்பார்கள். பணக்காரர், ஏழைகள், அடிமைகள், சுயாதீனமானவர்கள், வாழ்க்கையின் எல்லா நிலைகளிலுமுள்ள எல்லா இனத்தாரும் கிறிஸ்துவுக்கு பதில் சொல்ல வேண்டும் (II கொரி 5:10).

மனிதர்கள் மறைந்து கொள்ள நாடலாம். அவர்கள் ஒரு மனதோடு சாக்குபோக்கு சொல்லலாம். **மனிதர்கள் தங்கள் பாவங்களால் ஆளப்பட்டு, அவைகள் கர்த்தரால் கண்டுபிடிக்கப்பட்டபடியால் மிகுந்த வேதனையில் அல்லலுறுவார்கள்.** மறைந்து கொள்ள சாக்குபோக்கு சொல்ல, பயத்தில் அலற அவர்கள் எடுக்கும் எந்த முயற்சியும் ராஜாவுக்கு முன்பாக வெற்றி பெறாது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இரக்கமில்லாமல் தான் நடக்கும். ஏனென்றால் மனிதர்கள் வாழ்கின்ற நாட்களில் அவர்கள் மீது தேவன் இரக்கம் பாராட்டி ஆயத்தமாவதற்கு அவர்களுக்கு அநேக வாய்ப்புகளைக்

தேவனுடைய திட்டம் என்னவென்றால், இயேசு திரும்ப வரும் போது பிதாவாகிய தேவனிடத்தில் ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் (கொரி. 15:22-28). ராஜாதி ராஜா சாத்தான் மீதும் அவனுடைய சேனையின் மீதும் வெற்றி வாகை சூடுவார். எல்லாவற்றையும் அவர் வென்று வெற்றி சிறந்த ராஜ்யத்தை பிதாவிடத்தில் ஒப்புக்கொடுப்பார்.கிறிஸ்துவின் ராஜ்யத்தின் பிரஜைகளும் தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜைகளும் பிதவினால் என்றென்றும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் (எபே. 5:5). இந்த பூமிக்குரிய வாழ்விற்கான சோதைனைகள், பாடுகள் எல்லாம் ஒழிந்துபோகும். அங்கே சமாதானமும், தூய்மையும், அழகும் நீடித்திருக்கும் சமாதானமும் இருக்கும்.

ராஜா வருகிறார் என்பது அந்த மகிமையான நிகழ்வுக்கு ஒவ்வொருவரையும் ஆயத்தமாக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் உண்மையுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் (தீத்து 2:11,12). கிறிஸ்வுக்குள் இல்லாதவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஆயத்தமான நிலையிலே இருக்க வேண்டும் (மத் 7:21; மாற்கு 16:15,16; எபி. 5:8,9).

நம் ராஜா வருகிறார். இயேசு உங்கள் ராஜாவாக இல்லையென்றால், நீங்கள் அவருடைய ராஜ்யத்தில் இல்லையென்றால், நீங்கள் உங்கள் எஜமானுக்கு, ஆண்டவருக்கு சேவை செய்யவில்லையென்றால், நேரம் உங்களுக்கு வாய்ப்பு தருகிறபடியால் நீங்கள் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். ●

# மந்தையைக் கண்காணிப்போம்

Bro. Jerry Jenkins

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்து மூப்பர்களை சந்தித்த போது அவர்களுக்கு இவ்விதமாகப் புத்திமதி சொன்னார். "ஆகையால், உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்கணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கை யாயிருங்கள்" (அப். 20:28).

மூப்பர்களை நான் எப்போதுமே மதிப்பதுண்டு, வழக்கமாக அவர்கள் உதவிப் பெற்றுக்கொண்டு சேவைச் செய்வதில்லை, அதே நேரத்தில் பெரும்பாலும் அவர்கள் பாராட்டப்படுவதுமில்லை. மூப்பர்களால் தாங்கள் தவறாக நடத்தப்பட்டதாக சில பிரசங்கியார்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால், நான் எந்தெந்த மூப்பர்களிடமெல்லாம் சேவை செய்திருக்கிறேனோ, அவர்களெல்லாரும் என்னிடம் நியாயமாகவும், எனக்கு ஆதரவாகவும் இருந்து வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட தர்ம சங்கடமான நிலையைக் குறித்து கடும் வேதனை அடைவதை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் என்னவெல்லாம், எப்போதெல்லாம் முடிவெடுக்கிறார்களோ அது மற்றவர்களுக்கு காயத்தையும், கெட்ட எண்ணத்தையும் ஏற்படுத்தும்.

மூப்பர்கள் சபையைக் காண்காணிக்கும் போது எண்ணற்ற காரணிகள் நினைவில் வைக்கப்பட வேண்டும்.

### 1. கண்காணிப்பு சர்வதிகாரமுடையதாக இருக்கக்கூடாது

சபை என்னும் கழகத்தில் மூப்பர்கள் இயக்குநர்களின் ஒரு குழவாக இருக்கக்கூடாது, ஊழியர்களுடைய குடும்பத்தின் சிறந்த முன்னுதாரண முள்ள தலைவர்களாக இருக்கிறார்கள். மூப்பர்கள் அலுவல கூட்டங்களில் எந்த அளவு நேரத்தைச் செலவு செய்கிறார்களோ அதுவே அவர்கள் தாழ்மையான வேலைக்காரர்களாக இராமல் அதிகாரிகளாக இருக்க விரும்புவதை காட்டிக் கொடுக்கிறது. புண்படுத்திவிட்டு அல்லது வழிதப்பிச் செல்கிற சபை அங்கத்தினர்களிடம் ஒரு மேலாளரைப் போல் மூப்பர்கள் நடந்து கொண்டால் அவர்கள் எச்சரிக்கபட வேண்டும்.

### 2. கண்காணிப்பை மூப்பர்கள் செய்கிறவர்களாக இருக்க வேண்டும்; இது பன்மையில் சொல்லப்பட்டிருக்கிறது, ஒருமையில் அல்ல

மூப்பர்கள் செலுத்தும் அதிகாரம் ஒரு குறிப்பிட்ட பணியை பார்த்துக் கொள்ளும்படி பிரதிநிதிப்பட்டாலொழிய மூப்பர்கள் பன்மையில் தான் அதிகாரத்தை செலுத்த வேண்டும். கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் ஒரு மூப்பன் தனியாக அதிகாரத்தைச் செலுத்தக் கூடாது என்பதை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பிராந்திய சபையில்

இரண்டு மூப்பர்கள் இருக்கும்போது, ஒருவர் இறந்து விட்டால் மற்றொருவர் ராஜினாமா செய்து விட வேண்டும், ஏனென்றால், தேவன் தம்முடைய சபையை கண்காணிக்க ஒருபோதும் ஒரு மனிதனை ஒழுங்கு படுத்தவில்லை.

சபை அங்கத்தினர்கள், சில கேள்விகள் கேட்டு தேவ பக்தியுள்ள மூப்பர் ஒருவர் அதற்கு பதிலளிக்க வேண்டுமென்று வலியுறுத்தி அவரை ஓரம் கட்டுவதால் அவர் தன்னுடைய எல்லையைத் தாண்டாமல் இருக்க உதவிச் செய்ய முடியும். அங்கத்தினர்கள் சில அனுகூலமான செல்வாக்கைப் பெற்றுக் கொள்வதற்காக மூப்பரின் நட்பைப் பெற முயற்சிப்பதை நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம். கிறிஸ்துவுக்குப் புறம்பான இத்தகைய செயல்பாடுகளெல்லாம் ஒவ்வொரு தேவ பக்தியுள்ள மூப்பனும் நான் எந்த ஒரு கேள்விக்கும் பதில் அளிப்பதற்கு முன்பாக சக மூப்பர்களின் முடிவுக்காக காத்திருக்கும்போது நின்று விடும்.

### 3. மூப்பர்கள் தங்களுக்குத் தாமே அல்ல மந்தையை கண்காணிக்க வேண்டும்

நாம் இப்படிச் சொல்வதன் பொருள் மூப்பர்கள் எப்போதுமே தங்கள் இருதயங்களில் மந்தையைக் குறித்த நலனை வைத்திருக்க வேண்டும். பிரச்சனைகள் அதிகமாக ஏற்படும் போது செயல்படுவதற்கு சுலபமான வழி பெருமளவில் பலரை ஐக்கியத்தை விட்டு நீக்குவதுதான். ஆனால், தேவ பக்தியுள்ள மூப்பர்கள் சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்காகவும் இயேசு மரித்தார் என்பதையும், ஒரு ஆத்துமா பரலோகம் போவதற்கு உதவிச் செய்ய அதற்காக எந்த முயற்சி எடுத்தாலும் அது தகும் என்பதை அறிந்திருக்கிறார்கள். அங்கத்தினர்களை ஒழுங்குபடுத்துவதற்கு மூப்பர்களுக்கு சுலபமான வழி சீர்திருத்தக் கடிதம் எழுதுவதுதான். ஆனால், தேவ பக்தியுள்ள மூப்பர்கள் தனிப்பட்ட முறையில், முகமுகமாக அவர்களுக்குப் போதிப்பதைவிட சிறந்த தகவல் தொடர்பு சாதனம் இல்லை என்பதை புரிந்து கொள்கிறார்கள்.

நீண்ட காலத்திற்கு முன்பு எசேக்கியல் இஸ்ரவேலின் மேய்ப்பர்களுக்கு அறிவுரை வழங்கினார். அது இன்றும் தேவனுடைய ஆவிக்குரிய மந்தையின் மேய்ப்பர்களுக்கு பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

“ கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்; மனுபுத்திரனே, இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை; நீ தீர்க்க தரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்; கர்த்தராகிய ஆண்டவர் மேய்ப்பருக்குச் சொல்கிறார்; தங்களாலே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! மேய்ப்பர் அல்லவா மந்தையை மேய்க்க வேண்டும். நீங்கள் நெய்யைச் சாப்பிட்டு ஆட்டு மயிரை உடுப்பாக்கிக் கொள்ளுகிறீர்கள்; கொழுத்ததை அடிக்கிறீர்கள்; மந்தையையோ மேய்க்காமற் போகிறீர்கள். நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தா மலும், நசல் கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக் கொண்டு வராமலும் காணாமற் போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள்.( எசே. 34:1,4 ).